
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1088

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## உடன்பிறப்பே

நீரை.மகேந்திரன்

145

தி.மு.கழக வரலாற்றில் இடம்பிடித்த தீரர்களை வாராவாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்த வகையில், பெரியாரின் தொண்டராக, அண்ணாவின் தம்பியாக, கலைஞரின் உடன்பிறப்பாகப் பயணித்து, கழகம் வளர்த்த **எஸ்.ரத்தினவேல் பாண்டியன்** அவர்களின் வரலாற்றைப் பார்க்கலாம்.

# எஸ்.ரத்தினவேல்பாண்டியன்

# கழக சட்டத்துறையின் கம்பீரம்!

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தளகர்த்தர்கள் கலைத்துறையிலும், கற்பித்தல் துறையிலும் இயங்கிக்கொண்டே கழகத்தின் ஐம்பெரும் முழக்கங்களோடு இணைத்துக் கொண்டு, தங்களது செயல்களை அமைத்துக் கொண்டதுபோல, நீதித்துறையில், சமூக நீதி அடித்தளத்தை, அதன் அரசியலை, சட்டத்தின் துணை கொண்டு நிலைநாட்டியவர் ரத்தினவேல் பாண்டியன். உயர் நீதிமன்றம், உச்ச நீதிமன்றத்தின் நீதிபதியாக, பல முக்கிய வழக்குகளில் சட்டமும், அறமும் தவறாத நீதியரசராக அவர் புகழ்பெற்றார். அதற்கும் முன் அவர், அண்ணாவின் தம்பியாக முத்தமிழறிஞரின் உடன்பிறப்பாக, ஒருங் கிணைந்த நெல்லை மாவட்டக் கழகத்தின் மாவட்டச் செயலாளராகப் பெரும் வரலாற்றைப் பெற்றிருந்தவர். என்றென்றைக்கும், நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன் என்றால், அவரது அரசியல் அடையாளம் தி.மு.கழகம்தான்.

“கழகத்தின் சட்டத்துறைக்கு என்று ஒரு வரலாறு இருக்கிறது. ஒரு கம்பீரம் இருக்கிறது. அறிவு முகம் இருக்கிறது. நம்முடைய சட்டத்துறையில் இருந்துதான், நீதியரசர் ரத்தினவேல் பாண்டியன் போன்றவர்கள் உருவானார்கள்” என இன்றைய கழகத் தலைவர் அவர்கள், 2024-ஆம் ஆண்டில் கழகத்தின் சட்டத்துறை 3-வது மாநில மாநாட்டில் பெருமையுடன் குறிப்பிட்ட, கலைஞரின் அன்பு உடன்பிறப்பு அவர்.

திருநெல்வேலி மாவட்டம், திருப்புடைமருதூர் கிராமத்தில் 1929-ஆம் ஆண்டு பிறந்தவர் ரத்தினவேல் பாண்டியன். அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளியில் மேல்நிலைப் படிப்பும், பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் பட்டப் படிப்பையும் முடித்தார். சென்னை சட்டக் கல்லூரியில் 1954-ஆம் ஆண்டு சட்டப் படிப்பை முடித்து, வழக்கறிஞராகப் பணியைத் தொடங்கினார். அதேநேரத்தில், இளம் வயதிலேயே திராவிட இயக்கத்தின்பால் ஈர்ப்புகொண்டு இயங்கத் தொடங்கினார்.

மாணவப் பருவத்திலேயே திராவிடர் கழகம் நடத்திய இந்தி எதிர்ப்புப் போரில் பங்கேற்று கைதானவர். பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுத்துகள், பேச்சுகளால் ஈர்க்கப்பட்டவர், கழகத்தின் தொடக்க காலத்திலேயே உறுப்பினராக இணைத்துக் கொண்டு, நெல்லை மாவட்டக் கழகத்தை வளர்த்த முன்னோடியாகச் செயல்பட்டார்.

### துடிப்புமிக்க இளம் வழக்கறிஞர்

இளம் வழக்கறிஞராகத் துடிப்புடன் செயல்பட்டு வந்த ரத்தினவேல் அவர்கள் 1960-ஆம் ஆண்டுகளிலேயே நெல்லை மாவட்டக் கழகச் செயலாளராக, கழகத்தினரை அரவணைத்துச் செல்லத் தொடங்கினார். குறிப்பாக, கழகத்தின் அன்றைய சட்டப் போராட்ட முகமாகச் செயல்பட்டவர்.

1962-ஆம் ஆண்டு அம்பாசமுத்திரம் சட்டமன்றத் தேர்தல் வேட்பாளராகக் கழகத்தின் சார்பில் களமிறங்கி, வெற்றிவாய்ப்பை இழந்தார். சட்டமன்றம் செல்ல வாய்ப்பு அமையவில்லை என்றாலும், மக்கள் மன்றமும், நீதிமன்றமும் அவருக்கான இடத்தை வைத்திருந்தன. 1963 விலைவாசி உயர்வுப் போராட்டம், 1965 இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் சிறைசென்றவர்.


1964 சட்ட நகல் எரிப்புப் போராட்டத்தில் 1964 மே 1 முதல் மே 14-ஆம் தேதி வரையிலான நெல்லை மாவட்ட மறியல் போராட்டக் குழுவின் தலைவராக முன்னின்று, கொடூர தாக்குதல்களைச் சந்தித்தார். இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் கலைஞர் கைதுசெய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டபோது, அவருக்கு ஆறுதலாக தினமும் சென்று பார்த்து வருவார் ரத்தினவேல் பாண்டியன். இந்தத் தகவலை, ‘நெஞ்சுக்கு நீதி’யில் பதிவு செய்துள்ளார் முத்தமிழறிஞர் கலைஞர்.

1966-ஆம் ஆண்டு, வத்தலக்குண்டுவில் நடைபெற்ற தி.மு.க மதுரை மாவட்ட மாநாட்டுக்குத் தலைமை ஏற்று, பேரறிஞர் அண்ணா அவர்களின் பாராட்டைப் பெற்றார். அந்த மாநாட்டுக்கு, பேரறிஞர் அண்ணா, கலைஞர், நாவலர் என அனைவரையும் அழைத்து வந்த பெருமை அவரையே சாரும். 1967-ஆம் ஆண்டில், ரத்தினவேல் பாண்டியன் அவர்களை, பேரறிஞர் அண்ணா நெல்லை மாவட்டத்தின் அரசு வழக்கறிஞராக நியமித்தார்.

அண்ணாவின் மறைவுக்குப் பின்னர், கலைஞரின் தலைமையை ஏற்று செயல்பட்ட முன்னோடிகளில் ஒருவர். சட்டப் போராட்டங்களில் அவர் காட்டிய உறுதிக்காக, 1971-ஆம் ஆண்டில் சேரன்மகாதேவி தொகுதியில் போட்டியிட களமிறக்கினார் கலைஞர். ஆனால், 193 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிவாய்ப்பை இழந்தார்.

### நீதித்துறைக்கு நல்வாய்ப்பு

அந்தத் தேர்தல் தோல்வி, ஒருவகையில் இந்திய நீதித் துறைக்கு கிடைத்த நல்வாய்ப்பாகவும் அமைந்தது. அதே ஆண்டில், அவருக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞராகும் வாய்ப்பினை அளித்தார் கலைஞர். அதன்பின்னர், 1974-ஆம் ஆண்டில், உயர் நீதிமன்றத்தின் நீதிபதியாகும் வாய்ப்பு கிடைத்துப் பணியாற்றத் தொடங்கினார். 1988-இல் தலைமை நீதிபதி (பொறுப்பு) ஆக இருந்தார். 1988-ஆம் ஆண்டு டிசம்பர் 14-இல் உச்ச நீதிமன்ற நீதிபதி ஆனார். அவரது பணிக்காலத்தில் நீதித் துறையில் அனைவரும் மெச்சத்தக்க விதத்தில் பணியாற்றினார். அவர் அளித்த தீர்ப்புகள் முன்னுதாரணமானவை. அவரது, சமூகநீதி கொள்கைப் பற்றுக்குச் சான்றாக விளங்குபவை.




1990 ஆண்டில் சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அரசு கொண்டுவந்த மண்டல் கமிஷன் பரிந்துரைகளை எதிர்த்து, வட மாநிலங்களில் போராட்டங்கள் நடந்தன. மண்டல் பரிந்துரைகளை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் வழக்குகள் போடப்பட்டன. அந்த வழக்கில் தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் என இரண்டு மாநிலங்கள்தான் மண்டல் பரிந்துரைகளை எதிர்த்து வாதாடவில்லை. 1992-ஆம் ஆண்டு அந்த வழக்கை விசாரித்து தீர்ப்பளித்த ஏழு நீதிபதிகள் அடங்கிய அமர்வில், நீதிபதி ரத்தினவேல் பாண்டியனும் இருந்தார். என்ன தீர்ப்பு சொல்லியிருப்பார் என சொல்லவே தேவையில்லை. அவர் வழங்கிய தீர்ப்புதான், இந்தியாவில் சமூக நீதியை நிலைநாட்டியது. நாட்டில் இடஒதுக்கீட்டுக்கு எதிராக திரும்பிய உணர்ச்சிக் குவியல்களைக் கட்டுப்படுத்தியது.

அதேபோன்று, 1994-ஆம் ஆண்டில் கர்நாடக மாநில முதல்வர் எஸ்.ஆர்.பொம்மை அரசு, ஒன்றிய அரசால் பதவி நீக்கம் செய்யப்பட்டபோது, அது தவறு எனக் கூறி அவர் வழங்கிய தீர்ப்பு, மாநிலச் சுயாட்சி உரிமைக்கு அரண் அமைத்தது. அரசியல் சட்டப்பிரிவு 356 குறித்த வழக்கு ஒன்பது நீதிபதிகள் கொண்ட அமர்வில் விசாரணைக்கு வந்தபோது அந்த அமர்வில் ரத்தினவேல் பாண்டியனும் அங்கம் வகித்தார்.

குடியரசுத் தலைவர் பிறப்பித்த உத்தரவை, நீதிமன்றச் சீராய்வுக்கு உட்படுத்த முடியாது என்பதுதான் அதற்கு முந்தைய நிலை. ஆனால், ஒரு மாநில அரசைக் கலைக்க குடியரசுத் தலைவர் எடுக்கும் முடிவு சட்டத்துக்கு உட்பட்டதா என்று பார்ப்பதற்கு, நீதிமன்றங்களுக்கு அதிகாரம் இருக்கிறது என்று அந்தத் தீர்ப்பில் கூறப்பட்டது. பெரும்பான்மை நீதிபதிகளில் ஒருவராக அவர் அளித்த தீர்ப்பு, இன்று வரை எல்லோராலும் பேசப்பட்டு வருகிறது.

### தென்மாவட்ட வளர்ச்சி

1994-ஆம் ஆண்டு பணி ஓய்வுபெற்ற அவரை, தென்மாவட்டங்களின் சமூக பொருளாதார நிலை குறித்த ஆணையத்தின் தலைவராக நியமித்தார் கலைஞர். தென்மாவட்டங்களில் சாதிய வன்முறைகளைக் குறைக்கவும், அங்கு சமூகப்பொருளாதார நிலை வளர்ச்சி குறித்து ஆராய்ந்து விரிவான அறிக்கையைத் தரவும் ரத்தினவேல் பாண்டியன் அவர்கள் தலைமையில், குழு அமைத்தார் கலைஞர்.

> அரசியல் களத்திலும், அரசியலமைப்புக் களத்திலும் வெற்றித்தடம் பதித்த முன்னோடி ரத்தினவேல் பாண்டியன், கழக வரலாற்றில் என்றென்றும் நினைக்கப்படுவார்.

சமூகநீதியிலும், அரசியல் சட்டத்தின் மாண்பைக் காப்பதிலும், அறத்துடன் செயல்பட்ட நீதியரசர் 2018-ஆம் ஆண்டு வயது மூப்பு காரணமாக இயற்கை எய்தினார். அரசியல் களத்திலும், அரசியலமைப்புக் களத்திலும் வெற்றித்தடம் பதித்த முன்னோடி ரத்தினவேல் பாண்டியன், கழக வரலாற்றில் என்றென்றும் நினைக்கப்படுவார்.

...துடிக்கும்

## மதவெறிக் காடாகிறதா ஒடிசா?

ஒடிசாவின் தேன்கனல் மாவட்டத்தில் உள்ள பர்ஜாங் கிராமத்தில், ஜனவரி 4-ஆம் தேதி, கிறிஸ்தவ பாதிரியார் பிபின் பிஹாரி நாயக்கை தாக்கி, அவர் வாயில் மாட்டுச்சாணத்தைத் திணித்து, ‘ஜெய் ஸ்ரீராம்’ எனச் சொல்லச் சொல்லி வற்புறுத்தியுள்ளது, பஜ்ரங் தள் அமைப்பு. மேலும் அந்த அமைப்பினர், அவருக்கு வலுக்கட்டாயமாகத் திலகம் அணிய செய்து, செருப்பு மாலையிட்டு ஊர்வலமாக அழைத்துச் சென்றனர். இந்துத்துவா கும்பலால் பாதிரியார் கொடூரமாகத் தாக்கப்பட்டு, பொதுவெளியில் பகிரங்கமாக அவமானப்படுத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, 15 நாட்களுக்கும் மேலாகிவிட்டது. ஆனால், இதுவரை அந்த வழக்கில் யாரும் கைது செய்யப்படவில்லை.

பாரதிய ஜனதா கட்சி, ஒடிசாவில் ஆட்சி அமைத்த நாள் முதல், இத்தகைய சம்பவங்கள் சர்வ சாதாரணமாகி வருகின்றன. கடந்த சில வாரங்களில் மட்டும், மாடுகளை ஏற்றிச் சென்றதற்காக ஒரு முஸ்லிம் நபர் பசு பாதுகாவலர்களால் அடித்துக் கொல்லப்பட்டார். மயூர்பஞ்ச் மாவட்டத்தில் மற்றொரு முஸ்லிம் இளைஞர் நிர்வாணப்படுத்தப்பட்டு, ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டுள்ளார். மல்கங்கிரி மாவட்டம், கோட்டமத்தேரு கிராமத்தில், தேவாலயத்திலிருந்து திரும்பிய கிறிஸ்தவர்கள் தாக்கப்பட்டதில் எட்டு பேர் காயமடைந்தனர்.

இந்த மாத தொடக்கத்தில், பஜ்ரங் தள் அமைப்பைச் சேர்ந்தவர்கள், கன்னியாஸ்திரி ஒருவரை ரயிலில் இருந்து வலுக்கட்டாயமாகக் கீழே இறக்கிவிட்டுள்ளனர். மதமாற்றப் புகாரில் அவரை 18 மணி நேரம் காவலில் வைத்த கொடுமையும் நடந்திருக்கிறது.

கடந்த மாதம், கிறிஸ்துமஸ் பொருட்களை விற்றதற்காக, அப்பாவி கூலித் தொழிலாளர்களை இந்துத்துவா அமைப்பினர் மிரட்டி, கடைகளை அகற்றினர். கட்டாக்கில், துர்கா பூஜையின்போது முஸ்லிம்கள் வசிக்கும் பகுதி வழியாகச் சென்று வன்முறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர்.

ஒடிசாவிற்கு வளர்ச்சியைத் தரப்போகிறோம் என்று நீட்டி முழங்கினார்கள் மோடியும் அமித் ஷாவும். ஆனால், வன்முறையும் மதவெறுப்பும்தான் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டிருக்கிறது என்பதைத்தான், அங்கிருந்து வரும் செய்திகள் உறுதிப் படுத்துகின்றன.

## ஃப்ளாஷ்பேக்



### மொழிப்போரில் கல்லூரிக் களம்!



பேராசிரியர்
க.முத்துச்சாமி

1966-ஆம், ஆண்டில், நான் மதுரை தியாகராசர் கல்லூரியில் படிக்கும் காலத்தில், திராவிடர் மாணவர் முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாட்டுடன் உழைத்து, மாணவர் பேரவை மற்றும் இளங்கோ மன்றத்திற்கு உறுப்பினர்களைச் சேர்த்து வந்தேன். இளங்கோ மன்றச் செயலாளராகவும் பணியாற்றி, சேடப்பட்டி முத்தையா போன்றோரை இயக்கத்திற்குள் கொண்டு வந்தேன். அப்போது, கழகத்தின் பொருளாளராக இருந்த கலைஞரை அந்த ஆண்டு, தியாகராயர் கல்லூரியில் நடைபெற்ற முத்தமிழ் விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக அழைத்து, கூட்டம் நடத்தினோம். இந்தப் படத்தில் கலைஞருடன், அன்றைய சென்னை மாநகராட்சி மேயர் மைனர் மோசஸ், மொழிப்போர் வீரர்கள் கவிஞர் இன்குலாப், காளிமுத்து, காமராசன், சேடப்பட்டி முத்தையா ஆகியோருடன் நானும் இடம்பெற்றுள்ளேன்.

– பேராசிரியர் க.முத்துச்சாமி, மணலூர், சிவகங்கை.

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### மொய்தீன் பிச்சை பந்தல்!

1958-ஆம் ஆண்டு மார்ச் 8 மற்றும் 9-ஆம் தேதிகளில், மதுரை மாவட்டக் கழகத்தின் 3-வது மாநாடு பழனியில் நடைபெற்றது. கழகத் தியாகி மொய்தீன் பிச்சை பெயரில், மாநாட்டுப் பந்தல் அமைக்கப்பட்டிருந்தது. பெண்கள், முதல் நாள் மாநாட்டிலேயே மிக அதிகமாகக் கூடினர். கழகத் தோழர்கள், மனைவி - மக்களுடன் வருகை தந்து மாநாட்டைச் சிறப்பித்தனர். ‘பழனியில், இது போன்ற கூட்டம் விழாக்காலங்களிலும் காண்பது அரிது’ என மக்கள் பேசினர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131